Revised

**செய்தி வெளியீடு எண் : 1176** **நாள் : 14.07.2022**

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
## செய்தி வெளியீடு

### செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழா நடைபெறவுள்ள நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் இன்று 14.07.2022 ஆய்வு

= = = =

44ஆவது செஸ் ஒலிம்பியாட் சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் வருகிற 28ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 10ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த போட்டிக்கான தொடக்க விழா சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் 28.07.2022 அன்று நடைபெறவுள்ளது. போட்டிக்கான தொடக்க விழா தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் இன்று 14.07.2022 ஆய்வு செய்தார்.

அப்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மை செயல் அலுவலர் / உறுப்பினர் செயலர் மருத்துவர். கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

இந்த ஆய்வின் போது விழா மேடை அமைப்பு, பார்வையாளர்கள் அரங்கம், இருக்கை வசதி, விழா நேரலை செய்வதற்கான வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் நடைபெற்று வரும் மேம்பாட்டு பணிகளை ஆய்வு செய்த பின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது –

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் சர்வதேச விளையாட்டு உலகமே வியக்கும் வகையில் தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள செஸ் ஒலிம்பியாட் துவக்க விழா நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் வருகிற 28.07.2022 அன்று மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. இதற்கான ஆயத்த பணிகள் தமிழ்நாடு அரசின் சார்பில் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கண்காணிப்பில் நேரு உள்விளையாட்டு அரங்கின் பராமரிப்பு பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகிறது. வரும் 20ஆம் தேதிக்குள் அனைத்து பணிகளும் நிறைவடையும். நேரு உள்விளையாட்டு அரங்கில் உள்ள இருக்கைகள் அனைத்தும் மறு சீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்த அரங்கத்திற்குள் கூடுதலாக 125 டன் ஏசி அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த போட்டியில் பங்கேற்கவுள்ள 187 நாடுகளை சேர்ந்த 2000 சர்வதேச வீரர்கள் சென்னை விமானநிலையத்திற்கு 23ஆம் தேதியிலிருந்து வந்து இறங்கியபின் தங்கும் விடுதி மற்றும் போட்டி நடைபெறும் இடத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்ல தமிழ்நாடு அரசின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொரோனா தொற்று பரவாமல் இருக்க சர்வதேச வீரர்களுக்கு கட்டாயம் பரிசோதனை மேற்கொள்ளப்படும். வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டால் தனிமைப்படுத்தப்படுவார்கள். போட்டி நடைபெறக்கூடிய மாமல்லபுரத்தில் ஏழு மருத்துவ குழுக்கள் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ளது. போட்டி அரங்கத்திற்கு வெளியே அமைக்கப்படவுள்ள எல்.இ.டி திரை மூலம் போட்டியை கண்டு ரசிப்பதற்கான சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. வெளிநாட்டில் இருந்து வரும் விளையாட்டு வீரர்கள், செய்தியாளர்கள், சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் விசா ஏற்பாடு பணிகள், வாகன வசதி மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செஸ் ஒலிம்பியாட் போட்டி கலந்து கொள்ளும் வீரர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் சுற்றுலாத்துறை மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாமல்லபுரம் மற்றும் சென்னையில் நட்சத்திர விடுதிகளில் 2000திற்கும் மேற்பட்ட அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பூஞ்சேரி பகுதியில் செஸ் ஒலிம்பியாட் விளையாட்டு போட்டிகள் நடத்துவதற்கான அனைத்து பணிகளும் வருகிற 23.07.2022 ஆம் தேதிக்குள் முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்போட்டியினை உலக மக்கள் அனைவரும் நேரலையில் கண்டு களிக்கும் வகையில் சிறப்பான ஏற்பாடுகள் அரசின் சார்பில் செய்யப்பட்டு வருகிறது. இது நம்ம சென்னை, நம்ம செஸ், நம்ம பெருமை என்ற வகையில்

தமிழினத்தின் கலாச்சாரம், பண்பாடு மொழிப் பெருமையினை உலகிற்கு பறைசாற்றுகின்ற வகையில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து இப்போட்டியினை வெற்றி பெற செய்ய வேண்டும் எனக் கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in